Tamil Poetry - Honourable Mention

ரமேஷ் ராஜூ (Ramesh Raju)

விளம்பரத்தாள் (Flyers) and other poems

**விளம்பரத்தாள்**

வேண்டியதில்லை எனக்கந்த

விளம்பரத்தாள்

ஆயினும் ஒன்றை

வாங்கிக் கொண்டு நடந்தேன்

பாவம்...

எத்தனை நேரந்தான்

நிற்பாளந்த வயோதிகத் தாய்

தாளும் கஷ்டமும்

தீரட்டும் சீக்கிரம்…

கொடுப்பதால் மட்டுமல்ல

பெறுவதாலும் சிலரின்

பாரம் குறையலாந்தானே !

************************************

**துணை**

தலைப்பு மாறியக் கவிதை

முகவரி மாறிய கடிதம்

மனம் பொருந்தா உடை

இனந் தெரியாக் கேள்வி

கூட்டுப் புழுவாய் அடைபட்ட

பட்டுப் பூச்சியின் துடிப்பு

கூடே எனக்குச் சிறை

வீடே எனக்குப் பகை

ஆன்ம விடுதலை தேடி

அலைந்தது என் ஆவி

படைப்பு வேலைப்பளுவால்

இறைவா, கவனக்குறைவா?

ஓடுடைத்து விடுதலையான

உண்மையான என்னை

நிராகரித்த பிரும்மாக்கள்

பிழைத்திருத்தம் செய்த என் மேல்

ஏனிந்த வெறுப்பு நெருப்பு?

இரத்த சொந்தங்களும்

இரத்தாகிப் போயின

நட்பு பந்தங்களும்

நகைத்தே விலகின

வனத்திலே தனித்து

விடப்பட்ட மானாய்

அஞ்சுமென் விழிகளில்

பரமபதப் பாம்பாய்

பாதை நீள்கிறது

இலக்கே புரியாத

இக்கொடுந்தூரப் பயணத்தில்

யார்தான் பக்கத்துணை

என் போன்ற

திருநங்கைக்கும் திருநம்பிக்கும்?

****************************************

ரமேஷ் ராஜூ (Ramesh Raju)


**புரியாத புதிர்**

எல்லைகள் எப்போதும்

விரியும் அண்டமானது

இருளும் ஒளியும்

திரியும் பிண்டமானது

பிரமிக்கும் பிரமிடாய்

பெர்முடா முக்கோணமாய்

அதிசயங்கள் சூல்கொண்ட

ஆழியானது ஊழியானது

மெய்நிகர் உலகினை

நித்தமும் படைப்பது

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

விளையும் களமானாலும்

அஞ்ஞான மேகங்களும்

சஞ்சரிக்கும் வெளியானது

அருவமாய் நின்று

உருவத்தின் உயிரானது

முகமூடிகளின் பின்

முழுநிர்வாணம் மறைக்கும்

மனித மனமே

புரியாத புதிரானது!

இதில்

பெண் மனதை மட்டும்

பேதப்படுத்துவதும்

புரியாத புதிரானது !

*************************************

ரமேஷ் ராஜூ (Ramesh Raju)


**வீடு**

அம்மாவின் சேலைபோல அத்தனை இதந்தரும்

சும்மாவே இருந்தாலும் சுகமதை நிதந்தரும்

வெளியூர் சென்றங்கே வெகுநாட்க ளாகிவிட்டால்

எப்போது சேர்வோமென இனம்புரியா ஏக்கந்தரும்

சென்றதைச் சேர்ந்தாலே சுகமான தூக்கந்தரும்

ஊரெங்கும் நடித்துவிட்டு ஒப்பனைகள் கலையுமிடம்

நிழல்களின் நிஜங்கள் நிர்வாணமாய் அலையுமிடம்

சிரிப்பும் கண்ணீரும் சுவரெங்கும் நிறைந்திருக்கும்

விருப்பும் வெறுப்புமாக வீடெங்கும் உறைந்திருக்கும்

அனைத்து நிகழ்வுகளை அமைதியாய் உள்வாங்கி

நினைவுகளின் சுமைதாங்கி நிற்குமங்கே நமைதாங்கி

பாட்டனும் பாட்டியும்பட்ட பாட்டினை அதுவறியும்

கூட்டினைப் கூறுபோடும் குடும்பத்தை அதுபிரியும்

ஒற்றைக் கையெழுத்தில் விற்றதைப் பிரிந்தபின்பு

இல்லை யென்றான 'இல்'லை வழியிலாங்கே

என்றேனு மோர்நாள் எதேச்சையாய் கடக்கையிலே

கணவனுடன் காட்சிதரும் கடந்தகாலக் காதலியை

கண்பேசிக் கடந்திடும் கையறு நிலைக்கீடு

கலங்கிடக் கொடுத்திடுமே கைமாறிய வீடு !

************************************

ரமேஷ் ராஜூ (Ramesh Raju)



**மரண வாக்குமூலம்**

பயந்தது போல

அத்தனை வலியில்லை

மரணம்

பயந்திருந்த நேரமே

மிகுந்திருந்தது வலி

கடந்துவந்த பாதையில்

கால் சுண்டுவிரல் இடறியதாய்

உச்ச வேதனையளித்த

இழப்பின் தருணங்களைவிட

அத்தனைக் கொடிதாய் இல்லை

உயிர்ச்சுடர் அணைந்த நொடி

ஆறா ரணமாய்

மாறாது கனன்ற

வஞ்சங்களின் வலியைவிட

அத்தனை வேதனையில்லை

மரணத்தின் சந்திப்பு

ஆம்...

வாழ்தல்போல் அத்தனை

வலியில்லை மரணம்!

அவர்கள்தான் பாவம்

நான் இல்லாத

கூட்டைக் கண்டு

அத்தனை வலியோடும்

கதறிக் கொண்டு...

****************************************

ரமேஷ் ராஜூ (Ramesh Raju)

விளம்பரத்தாள் (Flyers) and other poems

**பொதி**

அழுக்கைச் சுமந்து போகும்போது

அழுவதுமில்லை

வெளுத்துத் திரும்பும் போதும்

மகிழ்வதுமில்லை

அதற்குத் தெரியும்

எப்படியாயினும்

அதே சுமைதான்

அதே வலிதான் !

************************************

ரமேஷ் ராஜு (Ramesh Raju)

விளம்பரத்தாள் (Flyers) and other poems

**வாடா வசைகள்**

எனக்களிக்கப்பட்ட பூங்கொத்துகளனைத்தும்

ஞாபகப்பிடியினின்று

வாசனையுதிர்ந்து வாடிவிட்டன

வசைகள் மட்டும்

ஏனோ நிலைத்துவிட்டன

இன்னும் துர்நாற்றம் வீசியபடி !

************************************

ரமேஷ் ராஜு (Ramesh Raju)

விளம்பரத்தாள் (Flyers) and other poems

**காதலர் தினம்**

அத்தனை ரோஜாக்களும்

கைமாறிய பின்னும்

மீதமாய் இன்னும்

ஒற்றையா யொரு

காம்பொடிந்த ரோஜாமொட்டு

குமரியவள் கூடையில்

வாங்கவும் கொடுக்கவும்

யாருமற்ற அந்த

ஒற்றை மலர்

வாடியபடி கூடையுடன்

வீடு திரும்பியது

விந்தியபடியே

**************************************